உதவி அமர்வு நீதிமன்றம், மேலூர்

S.C No.303/2021

பெயர் : வெங்கடேஷன்(அ.சா.1)

தகப்பனார் பெயர் :சுப்புராயலு

கணவர் பெயர் :

வயது :48

கிராமம் :சின்னக்களயம்புதுார்

வட்டம் :பழனி

தொழில் :லாரி ஓட்டுநர்

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

20.12.2024

முதல் விசாரணை:

நான் சென்னையில் கோல்ட் வின்னர் கம்பெனியில் லாரி ஓட்டி வருகிறேன். 28.04.2019 அன்று சென்னை மேடவாக்கத்தில் இருந்து கோல்ட் வின்னர் எண்ணெயை ஏற்றி லோடுடன் மதுரை வந்து கொண்டிருந்தேன். டீ சாப்பிடுவதற்காக இரவு சுமார் 11.30 -12.00 மணியளவில் மேலூர் பைபாஸ் அருகே உள்ளபேக்கரியில் நிறுத்தினேன். நான் டீ சாப்பிட்டு விட்டு நான்கு டையரையும் காற்று சரிபார்த்துவிட்டு கவனித்த போது லோடில் இருந்து எண்ணெய் கசிவு ஏற்பட்டது தெரிந்தது. மேலே ஏறி பார்த்த போது, 65 அட்டைப்பாக்ஸ் அதில் உள்ள கோல்ட்வின்னர் எண்ணெய் காணாமல் போய்இருந்தது. நான் நிர்வாகத்திற்கு போனின் மூலம் தகவல் கொடுத்தேன். அவர்கள் காவல்நிலையத்தில் புகார் அளிக்கும்படி கூறினார்கள். ஆஜர் எதிரிகளை நான் பார்த்ததில்லை. சாட்சியிடம் காட்டப்படும் புகார் சாட்சி பார்வையிட்டு அதை தான் எழுதி மேலூர் காவல்நிலையத்தாரிடம்

கொடுத்ததாக குறிப்பிடுகிறார் மேற்படி புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. காணாமல் போன எண்ணெய் அட்டைபெட்டிகள் 65 அதன் மதிப்பு சுமார் ரூபாய் 60000/- இருக்கும். நான் ஓட்டிச்சென்ற லாரி பதிவு எண்.TN03 F 0535 ஆகும். காவலர்கள் இதுதொடர்பாக என்னை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் முன்னிலையாகவில்லை என்பதால் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2024.12.20 20:40:13 +0530

Assistant Sessions Judge
Melur